Individual Copy

# கிருஷ்ணகிரி, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நடவடிக்கைகள்

## முன்னிலை : மரு. வி. ஜெயசந்திர பானுரெட்டி., இ.ஆ.ப.,

ந.க.எண்:15278/2019/கே2, நாள்:11.01.2022.

பொருள் : **பணியமைப்பு** - தமிழ்நாடு அமைச்சுப்பணி - கிருஷ்ணகிரி மாவட்டம் - ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகு - தினக்கூலி அடிப்படையில் தட்டச்சராக பணிபுரிந்த **திருமதி.கோ.சாந்தி** என்பவரை முறையான காலமுறை ஊதியத்தில் தட்டச்சராக பணியமர்த்தப்பட்டது - மாண்பமை உயர்நீதிமன்ற வழக்கு **W.P. No.11481/2018**, தீர்ப்புரை நாள்:11.02.2020 - தட்டச்சர் நிலையில் பணிவரன்முறை செய்திட அரசாணை (2ப) எண்.42, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (பஅ-7)துறை, நாள்:20.09.2021 வெளியிடப்பட்டது - பணிவரன்முறை செய்து ஆணையிடல்.

பார்வை :

1. அரசாணை (டி) எண்.754, ஊரக வளர்ச்சி மற்றும் பஞ்சாயத்துராஜ்(இ7)துறை, நாள்:26.12.2006.
2. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் செயல்முறைகள் ந.க.எண்.1225/2007/கே2, நாள்:04.11.2007.
3. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் அவர்களின் கடிதம் எண்.5716/சி.டி-3/2015, நாள்:31.01.2018.
4. அரசு இணை செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(இ7)துறை, சென்னை கடித எண்.23485/பஅ-7/2013-24, நாள்:12.03.2018.
5. இயக்குநர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை ந.க.எண்.40730/2009/பி1, நாள்:27.03.2018 மற்றும் 23974/2018/பி1, நாள்:05.06.2018 மற்றும் 05.07.2018.
6. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கு **W.P.No.11481/2018,** நாள்:30.09.2020
7. மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற வழக்கு **W.P. No.11481/2018,** தீர்ப்புரை நாள்:11.02.2020.
8. மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடர்ந்த மேல்முறையீட்டு வழக்கு எண்.**W.A.72/2021,** தீர்ப்புரை நாள்:23.03.2021.
9. கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் ந.க.எண்.15278/2019/கே3, நாள்:09.05.2021.
10. இயக்குநர், ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி இயக்ககம், சென்னை ந.க.எண்.23974/2018/பி1, நாள்:27.05.2021

**----0000----**

(...2..)

பார்வை : 11. செயலாளர், தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையம் கடித எண்.1827/சிடி-அ1/2021, நாள்:19.07.2021.

12. அரசாணை (2ப), ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பஅ-7)துறை, நாள்:20.09.2021.

13. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை ந.க.எண்.23974/2018/பி1, நாள்:06.10.2021.

14. தமிழ்நாடு அமைச்சுப்பணி விதி 32.

----0000----

**ஆணை :-**

பார்வை (1)-இல் காணும் அரசாணையில் 2006-2007-ஆம் ஆண்டு காலிப்பணியிட மதிப்பீட்டு அறிக்கையில் ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களிடமிருந்து பெறப்பட்ட முன்மொழிவுகளின் அடிப்படையில் மொத்தம் உள்ள 568 காலிப்பணியிடத்தை நிரப்ப அனுமதி அளித்தும், அவற்றில் 559 காலிப்பணியிடங்களை தேர்வாணையத்தின் மூலமும், ஒரு காலிப்பணியிடத்தை கருணை அடிப்படையிலான நியமனம் மூலமும் மற்றும் 8 காலிப்பணியிடங்களை தினக்கூலி அடிப்படையிலும் நிரப்பிக்கொள்ள அனுமதி அளிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்ட 8 காலிப்பணியிடங்களை தினக்கூலி அடிப்படையில் நிரப்பிக்கொள்ள வழங்கப்பட்ட அனுமதியில் ஒரு பணியிடம் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு உட்பட்டதாகும். அதன் அடிப்படையில் திருமதி.கோ.சாந்தி, தினக்கூலி தட்டச்சருக்கு பார்வை (2)-இன்படி காலமுறை ஊதிய ஏற்றத்தில் தற்காலிக தட்டச்சராக பணிநியமனம் செய்து ஆணையிடப்பட்டது.

தனியரது பணியினை தட்டச்சர் நிலையில் 12.11.2007 முற்பகல் பணிவரன்முறை செய்திட பார்வை (3)-இன்படி சென்னை ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

பார்வை (4)-இல் காணும் அரசு கடிதத்தில் தட்டச்சர் பணியிடமானது தமிழ்நாடு அரசுப்பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்குள் வரும் பதவி என்றும், இப்பதவி தேர்வாணையத்தால் நேரடி நியமனங்களுக்கான போட்டித்தேர்வுகள் வழியே மட்டுமே நிரப்பப்பட்டு வருவதாகவும், பணிநியமன நாளிலிருந்து தனியரது பணியினை வரன்முறை செய்திட இசைவு வழங்க இயலாது எனவும் தெரிவிக்கப்பட்டது. அதன் அடிப்படையில் பார்வை (5)-இல் காணும் சென்னை ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்களால் தனியரது பணியினை தட்டச்சர் நிலையில் பணிவரன்முறை செய்ய இயலாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(...3..)

பார்வை (6)-இல் காணும் மாண்பமை சென்னை உயர்நீதிமன்றத்தில் திருமதி.கோ.சாந்தி என்பவர் தொடர்ந்த நீதிப்பேராணை வழக்கு எண்.**W.P.No.11481/2018**-க்கு கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் எதிர்வாதுரை தாக்கல் செய்யப்பட்டதில், மனுதாரர் பொருட்டு பார்வை (7)-இன்படி கீழ்க்கண்டவாறு தீர்ப்புரை வரப்பெற்றுள்ளது.

**"In view of the above discussion, the impugned order of the first respondent dated 12.03.2018 is hereby quashed and there shall be a direction to the first respondent to consider the petitioners to be falling under Tamil Nadu Ministerial Service Rules and order shall be passed regularizing the service of the petitioners in the post of Typist. The necessary proceedings shall be initiated and Government order shall be passed within a period of 12 weeks from the date of receipt of a copy of this order. The Government can specifically state in the Government order that the case of the petitioners have been considered on the peculiar facts and circumstances and it is regularized pursuant to the orders passed by this Court and it should be treated as a precedent in any other case. In the result, this writ petition is allowed. No Costs. Consequently, connected miscellaneous petitions are closed".**

பார்வை (9)-இன்படி திருமதி.கோ.சாந்தி என்பவருக்கு தற்காலிக தட்டச்சராக பணியில் சேர்ந்த நாளான 12.11.2007 முற்பகல் முதல் தனியரது பணியினை வரன்முறை செய்திடும் பொருட்டு தமிழ்நாடு அரசுப்பணியாளர் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016, பிரிவு 58-இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி பணிநியமன முறை, பணிஒதுக்கீடு ஆகிய இனங்களின் விதிகளான தமிழ்நாடு அமைச்சுப்பணிகளுக்கான சிறப்பு விதிகளில் விதி **3(g) (Method of Recruitment Special)**, விதி **26 (Reservation of Appointments)** மற்றும் விதி **28 (General Qualification as to age)** ஆகியவற்றை தனியர் பொருட்டு தளர்வு செய்திட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் பரிந்துரை செய்து அனுப்பப்பட்ட கருத்துருவினை ஊரக வளர்ச்சி இயக்குநர் அவர்கள் அரசிற்கு பரிந்துரை செய்துள்ளார்.

மேற்படி கருத்துரு மற்றும் பார்வை (11)-இல் காணும் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையத்தின் இசைவின் அடிப்படையில், பார்வை (12)-இல் காணும் அரசாணையில் சென்னை உயர்நீதிமன்ற 11.02.2020-ஆம் நாளிட்ட தீர்ப்பினை செயல்படுத்தும் பொருட்டு கீழ்க்கண்ட தினக்கூலி தட்டச்சருக்கு,

| வ. எண். | பெயர் (திருவாளர்கள்) | தினக்கூலி அடிப்படையில் பணியில் சேர்ந்த நாள் | மாவட்டம் | தற்காலிக தட்டச்சராக பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|---|---|
| 1. | கோ.சாந்தி | 01.10.1990 | கிருஷ்ணகிரி | 12.11.2007 |

(...4..)

அரசாணை (நிலை) எண்.22, பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்த்திருத்தத்துறை, நாள்:28.02.2006 மற்றும் அரசாணை (டி) எண்.754, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, நாள்:26.12.2006-இன்படி மாவட்ட ஆட்சித்தலைவரால் தற்காலிகமாக பணி நியமனம் செய்யப்பட்ட தனியரது பணியினை அவர் 10 ஆண்டுகள் பணிமுடித்து காலமுறை ஊதிய ஏற்ற முறையில் பணியில் சேர்ந்த நாள் முதல் தட்டச்சர் நிலையில் பணிவரன்முறை செய்ய ஏதுவாக, இந்நிகழ்வானது பிறிதொன்றிற்கு முன்நிகழ்வாக எடுத்துக்கொள்ளக்கூடாது என்ற நிபந்தனைக்கு உட்பட்டு, தமிழ்நாடு அமைச்சுப்பணிகளுக்கான சிறப்பு விதிகளில் விதி **3(g) (Method of Recruitment Special)**, விதி **26 (Reservation of Appointments)** மற்றும் விதி **28 (General Qualification as to age)** ஆகியவற்றை தனியர் பொருட்டு தளர்வு செய்யலாம் எனவும், மேற்காண் தனியர்களின் பணிமூப்பினை அவரவர்கள் தமிழ்நாடு அமைச்சுப்பணியில் தற்காலிக தட்டச்சராக காலமுறை ஊதிய ஏற்ற முறையில் பணியமர்த்தப்பட்ட நாள் முதல் நிர்ணயிக்கலாம் எனவும் முடிவு செய்து அரசு அவ்வாறே ஆணையிட்டுள்ளது.

எனவே பார்வை (12)-இன்படி தனியர் பொருட்டு வெளியிடப்பட்ட அரசாணையின் அடிப்படையில் கிருஷ்ணகிரி மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில் தினக்கூலி தட்டச்சர் நிலையிலிருந்து காலமுறை ஊதிய ஏற்ற முறையில் பணியில் சேர்ந்து, தற்போது **மத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் தட்டச்சராக** பணிபுரிந்து வரும் **திருமதி.கோ.சாந்தி** என்பவரின் பணியினை அவர் காலமுறை ஊதியத்தில் பணியில் சேர்ந்த நாளான **12.11.2007 முற்பகல் முதல் தட்டச்சர் நிலையில் பணிவரன்முறை செய்தும்**, பார்வை (14)-இன்படி தொடர்ச்சியாக மூன்றாண்டுகளில் ஈராண்டுகாலத்தினை தகுதிகாண்பருவமாக துவக்கி இதன்வழி ஆணையிடப்படுகிறது.

மேற்காணும் விவரப்படி பணிவரன்முறை செய்யப்பட்ட விவரம் சம்மந்தப்பட்ட தனியரது பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனச் சான்றளிக்கப்படுகிறது.

**மாவட்ட ஆட்சித்தலைவர்,**
**கிருஷ்ணகிரி.**

**பெறுநர்**

**திருமதி. கோ. சாந்தி,**
தட்டச்சர்,
ஊராட்சி ஒன்றியம், மத்தூர்.
**(வட்டார வளர்ச்சி அலுவலர் (வஊ)/(கிஊ), மத்தூர் மூலமாக**
**இரட்டை பிரதிகளில் சார்வு செய்து சார்வு நகல் அனுப்பிடும் பொருட்டு)**

ஊராட்சி ஒன்றியம், மத்தூர்.
ந.க.எண். 1140/2019/அ1 நாள் .01.2022
சார்வு செய்யப்பட்டது

**நகல் :** 1. அரசு முதன்மைச்செயலாளர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, தலைமைச்செயலகம், சென்னை-09.
2. இயக்குநர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்ககம், சென்னை.
3. வட்டார வளர்ச்சி அலுவலர் (வஊ)/(கிஊ), மத்தூர்.
4. **"கே2"** முக்கிய ஆணைத்தொகுப்பிற்கு

V. 27.1.22
வட்டார வளர்ச்சி அலுவலர் (வஊ)
மத்தூர்

D:\K2 - 1\Court Case\15278-2019-K2 Shanthi Court Case\15278-2019-K2 Shanthi Court Case.docx

பெற்றேன் 27/01/2022
திருமதி.கோ.சாந்தி,
தட்டச்சர்,
ஊராட்சி ஒன்றியம், மத்தூர்.